[illegible]

[illegible]

புநிதவதியார் என்னும்

காரைக்காலம்மையார்

திவ்விய சரித்திரம்.



[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] 10 - [illegible]

சிவனடியார்கள் சரித்திரம்.

பிரதி 1-க்கு விலை பைசா மூன்று.

திருஞானசம்பந்தசுவாமிகள் திவ்வியசரித்திரம்.
திருநாவுக்கரசுசுவாமிகள் திவ்வியசரித்திரம்.
சுந்தரமூர்த்திசுவாமிகள் திவ்வியசரித்திரம்.
கண்ணப்பநாயனார் திவ்வியசரித்திரம்.
சிறுத்தொண்டநாயனார் திவ்வியசரித்திரம்.
சண்டேசுரநாயனார் திவ்வியசரித்திரம்.
காரைக்காலம்மையார் திவ்வியசரித்திரம்.
திருநாளைப்போவார்நாயனார் சரித்திரம்.
திருக்குறிப்புத்தொண்டநாயனார் சரித்திரம்.
மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம்.
திருநீலகண்டநாயனார் சரித்திரம்.
இயற்பகைநாயனார் சரித்திரம்.

(இவை [illegible] வெளி[illegible].)

100-க்கு விலை ரூபா. 1—1—0 : 1,000-க்கு ரூபா 11—0—0
கொஞ்சம் காப்பிகள்தான் பதிப்பிக்கப்படுகிறதாகையின், வேண்டியவர் உடனே முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

ஞானரத்நாவளி.

பிரதி 1-க்கு விலை அணா ஒன்று.

இதில் [illegible]

[illegible]

இந்து[illegible]பேரிகை.

[illegible] (…in the Press)

பிரதி 1-க்கு விலை அணா மூன்று.

[illegible]

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.



திருவாலங்காடு [illegible] ரத்தினசபா[illegible] திருநடன

[illegible]



[illegible] காரைக்காலம்மையார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய

புனிதவதியார் என்னும்

காரைக்காலம்மையார்

திவ்விய சரித்திரம்.

சந்தானாசாரியராகிய

உமாபதிசிவாசாரியார்

திருவாய்மலர்ந்தருளிய

புராணசாரம்.

மருவுபுகழ்க் காரைக்கால் வணிகன் மிக்க
தனதத்தன் தரும்புனித வதியார் மாவின்
செங்கனியோ ரிரண்டருளா லழைப்பக் கண்டு
சிறக்கணவன் பிரியத் தூத்தேசஞ் சேர்ந்த
அவ்வுடலை விழுத்தொழுது தலையாலேறி
அம்மையே யெனத்தனைப்பா வென்று
பொங்குவடகயிலைபணிந் தாலங்காட்டிற்
புரிநடமனவரதம் போற்றினாரே.

திவ்விய சரித்திரம்.

சோழதேசத்திலே யிருந்த வளம்பொருந்திய காரைக்காலிலே வைசியகுலச்சிரேஷ்டராகிய தனதத்தச்செட்டியாரென்பவரொருவர் இருந்தார். அவருக்குப் புனிதவதியார் என்கின்ற ஒரு புத்திரியார் பிறந்தார். அத்தனதத்தர் அப்புத்திரியாரை நாகபட்டணத்திலே இருக்கின்ற நிதிபதி என்பவனுடைய புத்திரனாகிய பரமதத்தனுக்கு விவாகஞ்செய்து கொடுத்து, தனக்கு வேறு பிள்ளை இல்லாமையால், அவனை நாகபட்டணத்திற்குப் போகவிடாமல், தன்னுடைய வீட்டிற்கு அருகிலே ஒருவீடுகட்டுவித்து அளவற்ற திரவியங்களையுங்கொடுத்து, கணவனோடு அதிலிருத்தினான். பரமதத்தன் அத்தச்செல்வத்தை விருத்திசெய்து, இல்லறத்தை ஒழுங்குபெற நடத்திவந்தான். அவன் மனைவியாராகிய புனிதவதியார், பரமசிவனுடைய திருவடிகளிலே அன்பு மென்மேலு[illegible] இல்லறத்திற்கு வேண்டுவனவற்றை வழுவாது செய்வார்[illegible] தம்முடையவீட்டிற்குச் சிவனடியார்கள் வரின் அவ[illegible] அமுது ஊட்டி, அவரவர்வேண்டியபடி பொன், இரத்தின[illegible]ரம் முதலாயின உதவுவார். இவ்வாறு நிகழுங்காலத்திலே, [illegible] பரம

தத்தனிடத்திற் காரியமூலமாக வந்தவர்களுட் சிலர் அவனுக்கு இரண்டு மாம்பழங்கொடுக்க, அவன் அவைகளை வாங்கிக்கொண்டு அவர்கள் கருத்தைமுடித்து, அவைகளை மனைவியாரிடத்திற்கு அனுப்பிவிட்டான். மனைவியார் அவைகளை வாங்கிவைத்தபின்பு சிவனடியார் ஒருவர்பசியினால் வருந்தி, அவர் வீட்டிற்சென்றார். புனிதவதியார் அவ்வடியவருடைய நிலையைக்கண்டுமனம்வருந்தி, அவரையழைத்துச்சொடசோபசாரங்கள்செய்து, ஆசனத்திருத்தி, கலத்தைவைத்துச்சோறுபடைத்து, அந்நேரத்திலேகறியமுது பாகம்பண்ணப்படாமையால், சிவனடியவரே பெறுதற்கு அரிய விருந்தினராய் வந்தபொழுதே இதைப்பார்க்கிலும் பெறவேண்டியபேறு நமக்கு ஒன்றும் இல்லை என்று நினைந்து, தமமுடைய கணவன் அனுப்பியமாம்பழங்கள் இரண்டினுள் ஒன்றை எடுத்துக்கொண்டுவந்து படைத்து, அவ்வடியவரை அமுதுசெய்வித்தார். அடியவர் சோற்றையுங்கனியையும் உண்டு, புனிதவதியாருடைய செய்கையை உவந்துபோயினார். போயினபின் பரமதத்தன் நடுப்பகலிலே வீட்டிற்குவந்து போசனம் பண்ணும்பொழுது, மனைவியார் எஞ்சியிருந்தமாங்கனியைக்கொண்டுவந்து, கலத்திலேவைத்தார். பரமதத்தன் மதுரமாகியமுள்ள அந்தக்கனியை உண்டு, அதன் இனியசுவையினாலே திருப்தியடைந்தமையால் மனைவியாரைநோக்கி, பெண்ணே! மற்றக்கனியையும் கொண்டுவருவாய் என்றான். மனைவியார் கொண்டுவரச்செல்பவர்போலஉள்ளேபோய்நின்றுகொண்டு, சோதிக்குஞ்சடைமகுடத்திலங்கின்ற மெய்யன்பர்களுக்கு உற்றவிடத்து உதவுபவராயுள்ளய திருவடிகளைத் தியானித்தார். உடனே பரமேஸ்வரருடைய திருவருளினாலே, அதிமதுரமாகிய ஒருமாங்கனி அவர் கையில்வந்து இருந்தது. அவர் அதைக்கொண்டுவந்து, கணவனுடைய கலத்திலே இட்டார். அவன் அதனை உண்டு, அதன் சுவை தேவாமிர்தத்தைப்பார்க்கிலும் மிகச்சிறந்திருந்தமையால், இதுமுன்னான் தந்த மாங்கனியன்று; மூவுலகங்களிலும் பெறுதற்கு அரியது; இதனை நீ எங்கே பெற்றாய் என்றான். மனைவியார் அதைக்கேட்டு, தமக்குத் திருவருள் உதவியதிறத்தை வெளிப்படுத்துவது தகுதி அன்றென நினைத்தமையால் நிகழ்ந்ததைச் சொல்லமாட்டாதவரும், கணவனுக்கு உண்மையை மறுத்துக்கூறுதலும் தகுதியன்றென நினைத்தமையால், அதனைச்சொல்லாது விடமாட்டாதவருமாய் வருந்தி நின்று, பின் நிகழ்ந்தபடி சொல்ல [illegible] என்று துணிந்து, "சுவாமி! தாங்கள் இரண்டு மாம்பழங் [illegible] அனுப்பியபிறகு இவ்விடம் ஒரு அடியவர் மிகப்பசி கொ [illegible] னார். அந்நேரம் கறியமுது ஒன்றும் சித்தமாகா திரு [illegible] ர் கொடுத்தனுப்பிய கனிகளில் ஒன்றைவைத்து அமு [illegible] ணம் அளித்தேன். பிறகு தாங்கள் மற்றொருகனியைக் [illegible] ற்கு நான் யாதுசெய்வேன் என்று வருந்தி கருணைக் [illegible] பரமேஸ்வரனைத் தியானித்து நின்றேன். அவரு

டைய திருவருளினாலே இந்தக்கனி என்கையிலேவந்து இருந்தது" என்றார். பரமதத்தன் அதை நம்பாதவனாகி, மனைவியாரை நோக்கி, இக்கனி சிவபெருமானுடைய திருவருளினாலே கிடைத்ததாயின், இன்னும் ஒருகனி அவருடைய திருவருளினாலே அழைத்துத்தா என்றான். புனிதவதியார் அவ்விடத்தைவிட்டுப் போய்ப் பரமசிவனைத்துதித்து, இன்னும் ஒருகனி தந்தருளீராகில் அடியேனுடையவார்த்தை பொய்யாய்விடும் என்றுசொல்ல, சுவாமியுடையதிருவருளினாலே ஒருமாங்கனி அவர்கையில்வந்துஇருந்தது. அவர் அதைக்கொண்டுவந்து தன்கணவன்கையிற்கொடுக்க, அவன் ஆச்சரியமடைந்து வாங்கினான். வாங்கியபழத்தைப் பின்காணாதவனாகி மிகுந்தபயங்கொண்டு மனந்தடுமாறி, அப்புனிதவதியாரைத்தெய்வமென நினைந்து, அவரைப்பிரிந்து வாழவேணும் என்று துணிந்து, தன்கருத்தைப்பிறருக்கு வெளிப்படுத்தாமல் அவரோடு தொடர்பின்றி ஒழுகினான். ஒழுகு நாளிலே, ஒரு மரக்கலஞ்செய்வித்து, தான்செல்லவிரும்பிய தேசத்திலே விருப்பப்படுகின்றஅரும பண்டங்களை யெல்லாம்அதனிடத்து நிறைப்ப ஏற்றி, சுபதினத்திலே சமுத்திரராஜனாகிய வருணனைத் தொழுதுகொண்டு, மாலுமி முதலியாரோடும் ஏறி, அத்தேசத்தை அடைந்து வர்த்தகஞ்செய்து, சில நாளாயினபின், மீண்டும் அம்மரக்கலத்திலேறி, பாண்டிநாட்டிலுள்ள ஓர் நகரத்தை அடைந்து, அங்குள்ள ஒரு வைசியனுடைய மகளை விவாகஞ்செய்துகொண்டு, மகா ஐசுவரியத்தோடும்வாழ்ந்துகொண்டிருந்தான். அவனுக்கு அம்மனைவி வயிற்றிலே ஒரு பெண்குழந்தைபிறந்தது. அவன்தான் கூடிவாழ்தற்கு அஞ்சி நீங்கியமனைவியாரைத் தான்தொழும் தெய்வமாகக்கொண்டு அவருடைய புனிதவதியார் என்னும்பெயரையே அந்தப்பெண்ணிற்கும் இட்டான்.

பரமதத்தன் இப்படி இங்கே இருக்க, புனிதவதியார் காரைக்காலிலே கற்பினோடு இல்லறத்தைவழுவாது நடத்திக்கொண்டுவந்தார். அவருடைய உறவின்முறையோர்கள் சிலர் வர்த்தகத்தின்பொருட்டுச்சென்ற பரமதத்தன்பாண்டிநாட்டிலே ஓர்நகரத்திலேசெல்வத்தை விருத்தி செய்துகொண்டும் வேறோர் கலியாணம் செய்து இல்லறநடத்திக்கொண்டும் இருக்கின்றான் என்று கேள்வியுற்று, அவனிடத்திற் சிலரை அனுப்பி, அவனுடைய நிலையை உள்ளபடி உணர்ந்து, கவலைகூர்ந்து, புனிதவதியாரைத்தாமே அவனிடத்திற்குக்கொண்டுபோய்விடவேண்டும் என் [illegible] சிவிகையிலே ஏற்றிக்கொண்டுசென்று, அவனிருக்கிற நகரத்து [illegible] மித்து, தாம் புனிதவதியாரைக்கொண்டுவந்தமையை அவ [illegible] பித் தெரிவித்தார்கள். அவன் அதனை அறிந்து [illegible] தன்னுடைய இரண்டாம் மனைவியோடும் மகள [illegible] பாரிடத்திற்குவந்து அடியேன் உமதுடையகருணை [illegible] ன்றேன்; இந்தப்பெண்ணுக்கு உமதுடையபெயரே [illegible], என்

றுசொல்லிக்கொண்டு, அவளுடைய பாதங்களிலே விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். உடனே புனிதவதியார் தம்முடைய சுற்றத்தார்களிடத்திலே அச்சத்தோடும் ஒதுங்கிநிற்க, அவர்கள்வெட்கி, பரமதத்தனைநோக்கி, நீ உன்னுடையமனைவியை வணங்கவேண்டியகாரணம் யாது? என்றார்கள்; அதற்குப் பரமதத்தன், நான் இவரிடத்திலே ஒருபெரிய அற்புதத்தைக்கண்டபடியால் இவர்தெய்வப்பெண்ணேயன்றி மானிடப்பெண்ணன்றுஎன்றுதுணிந்து இவரைப்பிரிந்தேன்; இவரைநான்தொழுந்தெய்வம் என்றுகொண்டமையால், நான்பெற்ற இந்தக்குழந்தைக்குஇவர்பெயரையேதரித்தேன்; அதுபற்றியே இவருடையதிருவடியையும்வணங்கினேன்; நீங்களும் இவரைவணங்குங்கள் என்றான். அதுகேட்ட உறவினர்கள், இது என்ன ஆச்சரியம் என்றுதிகைத்து நின்றார்கள். புனிதவதியார் கணவன்சொல்லிய வார்த்தையைக்கேட்டு, பரமசிவனுடைய திருவடிகளைச்சிந்தித்து, சுவாமீ! இவனுடையகொள்கை இது; இனி இவன் பொருட்டுத்தாங்கிய அழகுதங்கிய தசைப்பொதியை நீக்கித்தேவரீரைச்சூழ்ந்துநின்று துதிக்கின்ற பேய்வடிவை அடியேனுக்குத்தந்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தார். அந்தக்கணத்தே அக்கடவுளுடைய திருவருளினாலே மாமிசம் முழுதையும் உதறி, எற்புடம்பாக மண்ணுலகமும் விண்ணுலகமும்வணங்கும்பேய்வடிவமாயினார்; அதுகண்ட உறவினர்கள் எல்லாரும் அஞ்சி அவரை நமஸ்கரித்துக்கொண்டு போய்விட்டார்கள்; புனிதவதியார், தமது உள்ளத்திலே சிவசத்தியால் விளக்கப்பட்ட சிற்சத்திகொண்டு, அற்புதத்திருவந்தாதியும், திருவிரட்டைமணிமாலையும் பாடியருளினார்.

அற்புதத்திருவந்தாதி.

திருச்சிற்றம்பலம்.

பிறந்துமொழிபயின்றபின்னெல்லாங்காதல்
சிறந்துநின்சேவடியேசேர்ந்தே—னிறந்திகழு
மைஞ்ஞான்றகண்டத்துவானோர்பெருமானே
யெஞ்ஞான்றுதீர்ப்பதிடர்.

உரையினிம்மாலையந்தாதிவெண்பா
கரைவினற்காரைக்காற்பேய்சொற்—பரவுவார்
ஆராதவன்பினோடண்ணலைச்சென்றேத்துவர்
பேராதகாதல்பிறந்து. திருச்சிற்றம்பலம்.

திருவிரட்டைமணிமாலை.

திருச்சிற்றம்பலம்.

கட்டளைக்கலித்துறை.

கிளர் ந்துயர்வந்தடுபோதஞ்சிநெஞ்சமென்பாய்
தளர் தெறவிர்திகண்டாய்தளராதுவந்தி
வளர் ங்கையும்வானத்திடைவளர்கோட்டுவெள்ளை
மிளா மருக்கும்மிருக்குஞ்சென்னியீசனுக்கே.

காரைக்காலம்மையார் சரித்திரம்.

வெண்பா.

உத்தமராய்வாழ்வாருலந்தக்காலுற்றூர்கள்
செத்தமரமடுக்கித்தீயாமுன்—உத்தமனுய்
நீளாழிநஞ்சுண்டநெய்யாடித்தன்றிறமே
கேளாழிநெஞ்சேகிளர்ந்து.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமத்கைலாயகிரிக்குப் போகவிரும்பி, புறப்பட்டு, மனசினுடபார்க்க பிருந்தவேகத்தோடு சென்று, அந்தக்கைலாசகிரியின்பக்கத்தை அடைந்து, அங்கே காலினல் நடத்தல் தகுதி அன்றென்று ஒழிந்து, தலையினலே நடந்துபோய் மலையிலேறினர்; ஏறும்பொழுது, உமாதேவியார அதைக்கண்டு, புனிதவதியாருடைய திடபத்தியைக்குறித்து உலகமாதாவாகிய உமாதேவியாரே ஆச்சரியம அடைந்தாராயின், நாம் எவ்வளவு ஆச்சரியம் அடைதலவேண்டும் என்று சிந்திக்கச் செய்யும்பொருட்டுத் தாம் ஆச்சரியமுடையவராகி, அவரது பக்திமகிமையை உயர்வொப்பில லாத பரமசிவனுடைய திருவாக்கினலேயே நமக்கு உணர்த்துவித்து நமமை உய்விக்கத் திருவுளங்கொணடு, அக்கடவுளை வணங்கி நின்று, சுவாமி! இங்கே தலையினல் நடந்து ஏறிவருகின்ற எற்புடம்பை உடையவரது அன்பின மகிமையாது ? என்றுகேட்க, பரமசிவன் இங்கேவருகின்றவள் நம்மைத்துதிக்கின்ற அம்மை என்றறி; இந்தப்பெருமைபொருந்திய வடிவத்தையும வேண்டிப் பெற்றுள் என்றார. பின் புனிதவதியாகச் சமீபத்தில் வந்தவுடனே உலகமெல்லாம் உய்யும்பொருட்டு அவரைநோக்கி, அமமையேஎன்று அழைத்தார். அதுகேட்ட புனிதவதியார், அப்பா ? என்று சொல்லிக்கொண்டு, அவருடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்து எழுந்தார. சுவாமி அவரைநோக்கி,உனக்குவேண்டும்வரம் யாது என்று வினவ, புனிதவதியார் வணங்கிநின்று, சுவாமி! அடியேனுக்கு இனிப்பிறவாமையேவேண்டும்; பிறக்கினும் தேவரீரை ஒருகாலமும் மறவாமைவேண்டும். இன்னும் தேவரீர் திருத்தஞ் செய்யும்பொழுது, தேவரீருடைய திருவடியின்கீழே சிவாநந்தத்தை உடையேனுகி,தேவரீரைப்பாடிக்கொண்டே இருத்தல்வேண்டும் என்றார். சுவாமி அவரைநோக்கி, நீ தென்றிசையிலுள்ள ஆலங்காட்டிலே நம்முடைய நடனத்தைத்தரிசித்து, பேரானந்தத்தோடு நம்மைப்பாடிக்கொண்டு இரு என்று [illegible]ளிச்செய்தார். அதுகேட்ட காரைக்காலம்மையார் சுவாமியை நமஸ்கரித்து அநுமதிபெற்றுக்கொண்டு திருவாலங்காட்டுக்குத் தலையினலே [illegible]சென்று, சுவாமியுடைய திருநடனத்தைத்தரிசித்து, [illegible] [illegible]ங்கி” என்பதை முதலிலுடைய மூத்த திருப்பதிகத்[illegible] “எட்டியிலவமீகை” என்பதை முதலிலுடைய திருப்[illegible] [illegible]டியருளினர்.

அம்மைமூத்ததிருப்பதிகம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

கொங்கைதிரங்கிநரம்பெழுந்து குண்டுகண்வெற்பக்குழிவயிற்றுப், பங்கிசிவந்திருபற்கணீண்டு பரடுயர்நீள்கணைக் காலோர்பெண்பேய், தங்கியலறியு லறுகாட்டிற்றாழ்சடை யெட்டுத்திசையும்வீசி, யங்கங்குளிர்ந்தன லாடுமெங்களப்பனிடந் திருவாலங்காடே.

கள்ளிக்கவட்டிடைக் காலைநீட்டிக் கடைக்கொள்ளிவாங்கிமசித்துமையை, விள்ளவெழுதி வெடுவெடன்னநக்கு வெருண்டுவிலங்குகாட்டிற், றுள்ளித்துடித்துச் சுடுபிணத்திச்சுட்டிட முற்றுஞ்சுழிந்துபூழ்தி, யள்ளியவிக்கநின்றாடு மெங்களப்பனிடந் திருவாலங்காடே. (உ)

வாகைவிரிந்து வெண்ணெற்றொலிப்ப மயங்கிருள்கூர் நடுநாளையாங்கே, கூகையோடாண்டலை பாடவாந்தைதோ டதன்மேற்குதித்தோடிவீசி, யீகைபடர் தொடர்கள்ளி நீழலீமமிசுடுகாட்டகத்தே, யாகங்குளிர்ந்தன லாடுமெங்களப்பனிடந் திருவாலங்காடே. (ங)

குண்டிலோமக்குழிச் சோற்றைவாங்கிக்குறுநரிதின்னவதனைமுன்னே, கண்டிலோமென்றுக னன்றுபேய்கள் கையடித்தோடிடுங்காட ரங்கா, மண்டிலநின்றங்குளாளமிட்டு வாதித்துவீசியெடுத்தபாத, மண்டமுறநிமிர்ந்தாடு மெங்களப்பனிடந் திருவாலங்காடே.

விழுதுநிணத்தைவிழுங்கியிட்டு வெண்டலைமாலை விரவிப்பூட்டிக், கழுதுதன்பிள்ளையைக் காளியென்று பேரிட்டுச் சீருடைத்தாய்வளர்த்துப், புழுதிதுடைத்து முலைகொடுத்துப் போயினதாயைவரவுகாணாது, தழுதுறங்கும்புறங் காட்டிலாடுமப்பனிடந் திருவாலங்காடே. (ரு)

பட்டடிநெட்டுகிர் பாறுகாற்பேய் பருந்தொடுகூகை பகண்டையாந்தை, குட்டியிடமுட்டை கூகைபேய்கள் குறுநரிசென்றிணங்காடுகாட்டிற், பிட்டடித்துப் புறங்காட்டி விட்டபிணந்தனைப போகப்பிரட்டியாங்கே, யட்டமேபாயநின் றாடுமெங்களப்பனிடந் திருவாலங்காடே. (சா)

சுழலுமழல் விழிக்கொள்ளி வாய்ப்பேய் சூழ்ந்துதுணங் கையிட்டோடியாடித், தழலுளெரியும் பிணத்தைவாங்கித் தான்றடிதின்றிணங் காடுகாட் ... ழலொலியோசைச் சிலம்பொலிப்பக் காலுயர் வட்ட ... ட்டுநட்ட, மழலுமிழ்ந்தோரி கதிக்கவாடுமப்பனிடந் திருவ... டே. (எ)

... துசென்று நன்னெறிநாடியந்தவனை, முடிமுடமுன்னியபேய்க்கணஞ்சூழச்சூழக், காடுங்க ...விண்ணுஞ் சுழலவனல்கையேந்தி, யாடுமெரப்பு... ந் திருவாலங்காடே. (அ)

துத்தங்கைக் கிளைவிளரிதாரமுழை யிளியோசைபண்கெழும ப்பாடிச், சச்சரிகொக்கரை தக்கையோடுதரணிச் சந்துந்துமிதாள ம்வீணை, மத்தளங்கரடிகை முன்கைமென்றோற் றமருகங்குடமு ழா மொந்தைவாசித், தத்தன்மைவிஞேடாடு மெங்களப்பனிடந்தி ருவாலங்காடே. (௯)

புந்திகலங்கி மதிமயங்கியிறந்தவரைப் புறங்காட்டிலிட்டுச், ச ந்தியிலவைத்துக் கடமைசெய்து தக்கவரிட்டசெந்திவிளக்கா, மு ந்தியமரர்முழ விஞேசைதிசைகதுவச் சிலமபார்க்கவார்க்க, வந்தி யின்மாநடமாடு மெங்களப்பனிடந் திருவாலங்காடே. (௰)

ஒப்பிணையிலலவன்பேய்கள் கூடியொன்றினை யொன்றடித் தொக்கலித்துப், பப்பிணையிட்டுப் பரண்டைபாடப பாடிருந்தந்தரி யாழமைப்ப, வப்பனையணிதிரு வாலங்காட்டுளடிகளைச் செடிதலை க்காரைக்காற்பேய், செப்பியசெந்தமிழ்பத்தும வல்லார்சிவகெதி சேர்ந்தின்ப மெய்துவரே. திருச்சிற்றம்பலம். (௧௧)

தேவாரம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டியிலவமீகைசூரைகாரைபடர்ந்தெங்குஞ்
சுட்டசுடலைசூழ்ந்தகள்ளிசோர்ந்தகுடர்கவ்வப்
பட்டபிணங்கள்பரந்தகாட்டிற்பறைபோலவிழிகட்பேய்
கொட்டமுழவங்கூளிபாடக்குழகனாடுமே. (௧)

நிணந்தானுருகிநிலந்தானனைப்பநெடும்பற்குழிகட்பேய்
கணங்கையெறிந்துகூழைநோக்கிச்சுடரகவிதத்தெங்கும
கணங்கள்கூடிப்பிணங்கண்மாந்திக்களித்தமனத்தவா
யணங்குகாட்டிலனலகையேந்தியழகனாடுமே. (௨)

புட்கள்பொதுத்தபுலால்வெண்டலையைப்புறமேநரிகவ்வ
வட்கென்றழைப்பவாந்தைவீசவருகேசிறுகூகை
யுட்கவிழிக்கவூமன்வெருட்டவோரிகதித்தெங்கும்
பிடகநக்கம்பேணுமிறைவன்பெயருமபெருங்காடே. (௩)

செத்தபிணத்தைத்தெளியாதொருபேய்சென்றுவிரல்சுட்டிக்
கத்தியுறுமிக்கனலவிட்டெறிந்துகடக்கப்பாய்ந்தோடிப்
பத்தல்வயிற்றைப்பதைக்கமோதிப்பலபேயிரிந்தோடப்
பித்தவேடங்கொண்டுநட்டம்பெருமானாடுமே. (௪)

முள்ளிதீந்துமுளரிகருகிமூளைசொரிந்துக்குக்
கள்ளிவற்றிவெள்ளில்பிறங்குகடுவெங் ... ள்ளே
புள்ளியிறைமான்றோலொன்றுடுத்து ... ல்பியற்கிட்டு
பள்ளியிடமுமதுவேயாகப்பரமனாடுங்கா
வாளைக்கிளரவளைவாளெயிற்றுவண்ணச்சிரிந்
மூளைத்தலையும்பிணமும்விழுங்கிமுழுநாடே
ரளிமயனியிலைபோன்மயிர்க்கட்டழல்ணுப்
கூளிக்கணங்கள்குழலோடியம்பக்குழகன்

நொந்திக்கிடந்தசுடலைத்தடவிநுகரும்புழுக்கின்றிச்
சிந்தித்திருந்தங்குறங்குஞ்சிறுபேய்சிரமப்படுகாட்டின்
முந்திமுழவம்விழவினோசைமுறைமைவழுவாமே
யந்திநிருத்தமனல்கையேந்தியழகனாடுமே. (எ)

வேய்களோங்கிவெண்முத்துதிரவெடிகொள்சுடலையுள்
ஓயுமுருவிலுலறுகூந்தலலறுபகுவாய்ப்
பேய்கள்கூடிப்பிணங்கள்மாந்தியணங்குபெருங்காட்டின்
மாயனாடமலையான்மகளுமருண்டுநோக்குமே. (அ)

கடுவனுகளுங்கழைசூழ்பொதும்பிற்கழுதும்பேயுமா
யிடுவெண்டலையுமீமப்புகையுமெரிந்தபெருங்காட்டிற் [டப்
கொடுவெண்மழுவும்பிறையுந்ததும்பக்கொள்ளென்றிசைபா
படுவெண்டுடியும்பறையுங்கறங்கப்பரமனாடுமே. (கூ)

குண்டைவயிற்றுக்குறியசிறியநெடியபிறங்கற்பேய்
இண்டைபடர்ந்தவிருள்சூழ்மயானத்தெரிவாயெயிற்றுப்பேய்
கொண்டுகுழவிதடவிவெருட்டிக்கொள்ளென்றிசைபாட
மிண்டிமிளிர்ந்தசடைகடாழவிமலனாடுமே. (க0)

சூடுமதியஞ்சடைமேலுடையார்சுழலவர்திருநட்ட
மாடுமரவபுனையிலாதவடிகளருளாலே
காடுமலிந்தகனல்வாயெயிற்றுக்காரைக்காற்பேய்தன்
பாடல்பத்தும்பாடியாடப்பாவநாசமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இங்ஙனம் திருவாய்மலர்ந்தருளிய நமது புநிதவதியார் என்னும் காரைக்காலம்மையார் ஆனந்தநடராஜப்பெருமானுடைய திருவருட்குஞ்சிதபாதத்தின்கீழ் எக்காலமும் சிவானந்தம் அனுபவித்துக்கொண்டிருக்கின்றார். சுபம்! சுபம்!!

காரைக்காலம்மையார் முத்தி அடைந்த நாள்:—

பங்குனிமாதம் - சுவாதிநக்ஷத்திரம்.

காரைக்காலம்மையார்

திவ்விய சரித்திரம்

முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஆளுடையபிள்ளையாரென்னும்

திருஞானசம்பந்தசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

திருவெழுக்கூற்றிருக்கை.

சிவஞாரூபம்.

திருச்சிற்றம்பலம்.

ஓருருவாயினை மானாங்காரத் - தீரியல்பாயொரு விண்முதல்பூதல மொன்றியவிருசுட ரும்பர்கள்பிறவும்-படைத்தளித்தழிப்ப மூவராதிக ளாயினை-யிருவரோடொருவ னாகிநின்றனை - யோரானீழ லொண்கழலிரண்டு-முப்பொழுதேத்திய நால்வர்க்கொளிநெறி - காட்டினைநாட்ட மூன்றாகக்கோட்டினை-யிருநதியரவமோ டொருமதிசூடினை-யொருதா ளீரயின மூவிலைச்சூல-நாற்கான்மான்மறி யைந்தலையரவ - மேந்தினை காய்ந்தநால் வாய்மும்மதத்-திருகோட்டொருகரி யீடழித்துரித்தனை - யொருதனுவிரு கால் வளையவாங்கி-முப்புரத்தோடு நானிலமஞ்சக-கொன்றுதலத்துற வவுணரையறுத்தனை-யைம்புலனாலா மந்தக்கரண-முக்குண மிருவளி யொருங்கியவானோ-ரேத்தநின்றனை யொருங்கியமனத்தோ - டிருபிறப்போர்ந்து முப்பொழுதுகுறைமுடித்து-நான்மறையோதி யைவகைவேள்வி-யமைத்தாறங்க முதலெழுத்தோதி-வரன்முறைபயின்றெழு வான்றனைவளர்க்கும்-பிரமபுரம்பேணினை-யறுபதமுரலும் வேணுபுரம்விரும்பினை-யிகலிய மைந்துணர் புகலியமர்ந்தனை-பொங்குநாற்கடல்சூழ் வெங்குருவிளங்கினை பாணிமூவுலகும் புதையமேன்மிதந்த - தோணிபுரத்துறைந்தனை தொலையாவிருநிதி-வாய்ந்தபூந்தரா யேய்ந்தனை - வரபுரமென்றுணர் சிரபுரத்துறைந்தனை-யொருமலையெடுத்த விருதிறலரக்கன - விறல்கெடுத்தருளினை புறவம்புரிந்தனை-முந்நீர்த்துயின்றோ னான்முகனறியாப் - பண்பொடுநின்றனை சண்பையமர்ந்தனை-யையுறுமமணரு மறுவகைத்தேரரு-மூழியுமுணராக் காழியமர்ந்தனை - யெச்சனேழிசையோன் கொச்சையைமெச்சினை யாறுபதமு மைந்தமர்கல்வியு-மறைமுதனான்கு-மூன்றுகாலமுந் தோன்றநின்றனை-யிருமையினொருமையு மொருமையின்பெருமையு-மறுவிலாமறையோர்-கழுமலமுதுபதிக் கவுணியன்கட்டுரை - கழுமலமுதுபதிக் கவுணியனறியு-மனையதன்மையை யாதலினின்னை - நினையவல்லவ ரில்லைநீணிலத்தே.

திருச்சிற்றம்பலம்.

சண்டேசுரநாயனார்சரித்திரப்புத்தகத்தின் கலர்காகிதம்

ஓர் பக்கத்தொடர்ச்சி.

இலையாற்றுநீமலர்க் காலாற்பணிக்குங்குற் றேவலெலாந்
தலையாறசெயும்பெண்கள் பல்லோரிற்பூமக டன்னைதந்தள்ளாய்
நிலையாறபெரியநின் றொண்டர்தம்பக்க நிலாமையினான்
மலையாற்கருளொற்றிவாழ்வேவடிவுடைமாணிக்கமே. (கஎ

கலைமகளோநின் பணியையயன்போடுங் கடைப்பிடித்தா
ளலைமகளோவன் பொடுபிடித்தாளெற் கறைதிகண்டாய்
தலைமகளேபருட் டாயேசெவ்வாய்க்கருந் தாழ்குழற்பொன்
மலைமகளேயொற்றி வாழ்வேவடிவுடை மாணிக்கமே. (கஅ)

பொன்னோடுவாணியென் போரிருவோரும் பொருணற்கல்வி
தன்னோடருளுந் திறநின்குற்றேவலைத் தாங்கிநின்ற
பின்னேவலநதன் முன்னேதெளிநிடப் பேசுகநீ
மன்னேயெட்டுறிலொற்றியூர வாழ்வடிவுடைமாணிக்கமே. (ககூ)

காமட்டலர்திரு வொற்றிநின்றுயகன் கந்தைசுற்றி
யேமட்டனையொடு நிற்பதுகண்டு மிரங்கலாபோ
னிமட்டும்பெம்பட்டுடுக்கின்றனையுன்ற னேயமென்னே
மாமட்டலர்குழன் மானேவடிவுடை மாணிக்கமே. (உ0)

வீற்றுநின்றன்மணத் தம்பியின்மேற்சிறு மெல்லணிச
மாறுநின்சிற்றடிப்போ தினைத்தூக்கி வைத்தாரெனின்மா
லேறுந்திருவொற்றி யூரார்களக்கறுப் பேற்றவரோ
பாற்ற்வீபவகொண மயிலேவடிவுடை மாணிக்கமே. (உக)

பொருபரிவியெனபார் நினைமெய்யது போலுமொற்றி
விருப்பாறுநாயகன பாம்பாபரணமும் வெண்டலையு
மொருபருகையும் கனன்மேனியுங்கண்டு நெஞ்சமஞ்சாய்
மருப்புநாங்கை மயிலேவடிவுடை மாணிக்கமே. (உஉ)

அனம்பொறுத்தான்புக ழொற்றிநின்றுயக னங்குமிழித்
தனம்பொறுத்தாளொரு மாற்றுனைதந்தன்முடி தனனில்வைத்தே
தினம்பொறுந்தானது கண்டுஞ்சினமின்றிச் சேர்ந்தநின்போன்
மனம்பொறுத்தாரெவர் கணடாய்வடிவுடை மாணிக்கமே. (உங)

ஒருருவாயொற்றி யூரமர்ந்தார்நின் னுடையவர்பெண்
ணிருருவாருநின் மாற்றுனைநீ தெளியாத்திறநதி
யொருருவாங்க சுமாதாரதனை நினைந்திலையே
வாருருவாகொங்கை நங்காய்வடிவுடை மாணிக்கமே. (உச)

சாரந்தேநினபாலொ ... முநாயகர் தாமகிழ்வ
கூரந்தேகுலாவ ... கொள்கையைக்காணிற் கொதிப்பளென்று
தோரந்தேயக ... கையைச் செஞ்சடைமேற்சிறை செய்தனரொன்
வா ... கொள விழியாய்வடிவுடை மாணிக்கமே. (உரு)

நீயே ... மைகுறிப்பாயெனி னின்னடிமைப்
பேடே ... ம்வண்ண மெவ்வண்ணமோவெனப் பெற்றளிக்குந்
தாயே ... த் தடங்கடலேயொற்றிச் சார்குமுத
வாயே ... தர மானேவடிவுடை மாணிக்கமே. (உசு)

முப்போதுமன்பர்கள் வாழ்த்தொற்றியூரெம் முதல்வர்மகி
ழொப்போதருமலைப் பெண்ணமுதேயென்று வந்துநினை
யெப்போதுஞ்சிந்தித் திடர்நீங்கிவாழ வெனக்கருள்வாய்
மைப்போதனையகண் மானேவடிவுடை மாணிக்கமே. (உஎ)

மீதலத்தோர்களுள் யார்வணங்காதவர் மேவுநடுப்
பூதலத்தோர்களுள் யார்புகழாதவர் போற்றிநிதம்
பாதலத்தோர்களுள் யார்பணியாதவர் பற்றிநின்றுண்
மாதலத்தோங்கொற்றி வாழ்வேவடிவுடை மாணிக்கமே. (உஅ)

சேய்க்குற்றந்தாய்பொறுத் தேடாவருகெனச் செப்புவளிந்
நாய்க்குற்றநீபொறுத் தாளுதல்வேண்டு நவின்மதியின்
றேய்க்குற்றமாற்றுந் திருவொற்றிநாதர்தந் தேவியன்பர்
வாய்க்குற்றநீக்கு மயிலேவடிவுடை மாணிக்கமே. (உகூ)

செங்கமலாசனன் றேவிபொன்னாளுந் திருமுதலோர்
சங்கமதாமிடற் றேங்குபொன்னாளுந் தலைகுளித்துத்
துங்கமுறுநாள நாணத்திருவொற்றித் தோன்றல்புனை
மங்கலநாணுடை யாளேவடிவுடை மாணிக்கமே. (ங0)

சேடரியன்மணம் வீசச்செயன்மணஞ் சோர்ந்துபொங்கு
வேடர்பொழிலொற்றி யூரண்ணனெஞ்ச மிருந்துய்மக
வீடாவிருண்முகிலும் பின்னிட்டு வெருவவைத்த
வாடாமலர்க்குழ லாளேவடிவுடை மாணிக்கமே. (ஙக)

புரநோக்கிநுற்பொடி சேக்கியவொற்றிப் புனிதர்களக்
கரநோக்கிமலமு தாகநிறபோற்றுங் கருத்தினரா
தரநோக்கியுள்ளிரு ணீக்கிமெய்ஞ்ஞானத் தனிச்சுகந்தான்
வரநோக்கியான்விழி மானேவடிவுடை மாணிக்கமே. (ஙஉ)

உன்னுந்திருவொற்றி யூருடையாரெஞ் சுவப்பவெழிற்
றுன்னுமுயிர்ப்பயி ரெல்லாந்தழைக்கச் சுகக்கருணை
யென்னுந்திருவமு தோயமழையூற்றி யெமதுளத்தின
மன்னுமகடைக்கண் மயிலேவடிவுடை மாணிக்கமே. (ஙங)

வெள்ளங்குளிருஞ் சடைமுடியோனொற்றி வித்தகன்ற
னுள்ளங்குளிரமெய் பூரிப்பவானந்த முறறெடுப்பத்
தெள்ளங்குளிரின் னமுதேயளிக்குஞ் செவ்வாய்க்குமுத
வள்ளங்குளிர்முத்த மானேவடிவுடை மாணிக்கமே. (ஙச)

மாரந்தமராயயற் காழிக்கவுணியர் மாமணிக்கன்
றுரந்தவின்னமு தூற்றுந்திருமுலை யாரணி
காரந்தவோங்கு மெழிலொற்றியாருட் களிதுயவே
வானந்தருமிடை மானேவடிவுடை மாணிக்கமே. (ஙரு)

வான்றேடநான்கு மறைதேடமாலுடன் வாரிசமே
லான்றேடமற் றையருந்தவா தேடவெண் ணன்பினரை
யானேடவென்னுள்ளஞ் சேரொற்றியூரெம் மிருநிதியே
யான்றேடுவாட்கண் மயிலேவடிவுடை மாணிக்கமே (ஙசா)

(இன்னும்வரும்.)